ஆட்சேபணையும் வரவில்லை. அக்விசிஷன் நடைபெறுவதில் எந்த விதச் சிக்கலும் இல்லை. ஒரு இடத்தில் ஒரு தோட்டத்தை எடுத்துக் கொள்வதைப்பற்றிப் புகார் வந்திருக்கிறது. அதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். நாகசுந்தரம் : வீராணம் திட்டத்தின் பெருமையைத் தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள இந்த நேரத்தில்தான் மக்கள் அதிகமாக உணருகிறார்கள். ஆகவே, இரட்டிப்பு வேகம் கொடுத்து இந்தத் திட்டத்தை அரசு அமல்படுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதிவேகத்துடன் வேலை நடந்து வருகிறது.

காவிரி கடைமடைப் பகுதி.

*** 251 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பாசனத்தின் கடைமடைப் பகுதி மழைக் காலத்தில் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப் படுவதை தவிர்க்க அரசினர் எடுத்துக் கொண்ட தீவிர நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காவிரி கழிமுகப் பகுதியின் கடைமடைப் பகுதியில் ஏற்படும் வடிகால் சிக்கலை அரசு நன்கு உணர்ந்துள்ளது. அது குறித்து முனைப்பாக ஆராய்ந்தும் வருகிறது. இச்சிக்கல் குறித்துப் புலனாய்வு செய்து தகுந்த செயற்குறிப்புகளைத் தயாரிக்க அரசு தனிக்கோட்டம் ஒன்றை ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இக்கோட்டம் தேவையான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. இக்கோட்டம் தயாரிக்கும் திட்டங்களை அரசு ஆராய்ந்து 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கிய தொகைக்கேற்ப ஒப்பளிப்பு வழங்கும். இதற்கிடையில், வடிகால் வசதியை உடனடியாகச் சீராக்க வேண்டிய பகுதிகளில் சிறுபாசனச் சிறப்பு திட்டத்தின் கீழ். குறிப்பிட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பாசனத்தின் கடைமடைப் பகுதிகளில் விவசாய ஆரம்ப காலங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடும், மழைக் காலங்களில் வெள்ளமும் ஏற்பட்டு வருகின்ற சூழ்நிலைகளை உடனுக்குடன் கவனித்து ஆவன செய்ய குறைந்தபட்சம் சீர்காழியில் தனி ஏ.இ. போட்டு செயல்படுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் எற்கனவே சொல்லியதுபோல் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

1969 செப்டம்பர் 12]

திரு. க. ர. நல்லசிவன்: மழை காலத்தில் வீணாகக் கூடிய தண்ணீரைச் சேமித்து வைத்து மீண்டும் புதிய பகுதிகளுக்குப் பாசன வசதி கொடுக்கும் திட்டம் இதற்குள்ளே இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தகவல் இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி: தஞ்சை ஜில்லாவில் சீர்காழி கடைசி தாலுக்காவாக இருப்பதால் சீர்காழி தாலுக்காவுக்கும், தென்னாற்காடுக்கும் இணைந்த ஒரு எஸ்.இ. இருப்பதால் இரட்டை ஆட்சி முறை இருந்து சிக்கல் அளிப்பதாக இருக்கிறது. ஆகவே, சீர்காழிக்கு ஒரு தனி ஏ.இ. நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இரட்டை ஆட்சி முறை இருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. ஒரு அதிகாரியின் ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரை ஏற்கனவே பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. நா. காசிராமன்: தஞ்சை ஜில்லாவில் காவிரி டெல்டாவில் கடைமடைப் பகுதியில் மட்டுமல்லாமல் மேல் பகுதியிலும் கும்பகோணம் தாலுகாவில் வடிகால் சரியாக இல்லாமல் இருக்கிறது. அங்கு வடிகாலைச் சரி செய்து விவசாயிகளுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தஞ்சை மாவட்டத்தில் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் பாயாமல் இருப்பதோடு மேற்குப் பகுதிகளில் வசதி படைத்தவர்களுக்காக 'பெட்டாம்' கட்டப்பட்டு தண்ணீர் பாய்வதால் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் போவதில்லை. இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வடிகால் வசதிபற்றிய கேள்வி. தண்ணீர் வராதது பற்றியதல்ல.

எரும்பூர் ஏரியிலிருந்து வடிகால்

* 252 வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தாலுக்கா வளையமாதேவி கிராமத்தில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி போக்குவரத்து தடைப்படுவதுடன் அரிசனத் தெருவையும் நஞ்சை நிலங்களையும் பாழ்படுத்தி வருவதைத் தடுக்க எரும்பூர் ஏரித் தண்ணீர் தாராளமாகப்போகும்படி ஒரு கலுங்கு (வடிகால்) கட்டிக் கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?